*1968 பிப்ரவரி 14]*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 46 (நாற்பத்தாறு) திட்டங்கள்.

(இ) 11 (பதினொரு) திட்டங்கள்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, பாக்கி இருக்கிற திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாக்கியுள்ள திட்டங்கள் 46 இல் 19 திட்டங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல என்று இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருபத்தேழு கசிவு நீர்த் திட்டங்களில் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி 11 திட்டங்கள் முடிவடைந்துவிட்டன. நிறைவேற்ற இருக்கிற திட்டங்கள் 7; நிறைவேற்ற ஆயத்தமாக உள்ள திட்டங்கள் 4. ஆய்விலே உள்ள திட்டங்கள் 5.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** இந்தக் கசிவு நீர்த் திட்டங்கள் ஏன் சிக்கிரமாக நிறைவேற்றப்படவில்லை என்று அதிகாரிகளைக் கேட்கும்பொழுது அவர்கள் சொல்கிறார்கள் நிதி வசதி இல்லையென்று. ஆகவே, குறைவாகச் செலவாகும் திட்டங்களை விவசாயிகள் முன்வந்து நிறைவேற்றிக்கொள்வதாக இருந்தால் அதற்கு அரசாங்கம் அனுமதியளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி விவசாயிகள் திட்டவட்டமான ஒரு குறிப்பை அனுப்புவார்களானால் அதுபற்றி யோசிக்கலாம்.

DR. H. V. HANDE : Sir, has this Government examined the quantum of acreage that might come under this scheme and also the extra food production that might yield by executing this scheme?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் திட்டங்களின் மூலமாகக் கூடுதலாக உணவு உற்பத்தி 902 டன் ஆகிறது.

*28 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) when the scheme for the utilisation of the seepage water of Palappalayam Pallam by constructing an anicut near Chandrapuram in Gobichettipalayam taluk, Coimbatore district was sanctioned; and

(*b*) the present state of the scheme?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) 1966, ஜூன் 1-ந் தேதியன்று இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(இ) கலங்கல், குறுக்கு கட்டிட வேலைகள் ஆகியவற்றுக்கான ஒப்ப அறிவிப்பு ( tender ) நிச்சயிக்கப்பட்டபின்னர், இந்த வேலை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 0-3-140 மைலில் முதல்சாலை மதகுக்கான கடைக்கால் போடும்

வேலை முடிவுற்றது. இத்திட்டத்தை விரிவு படுத்தவேண்டுமென முறையிட்டு வந்ததாலும், அதன் விளைவாக கால்வாய் வழியமைப்பில் மாறுதல் செய்யவேண்டி வருமாதலாலும், இவ்வேலை நிறுத்தி வைக்கப்பட்டது. இத்திட்டத்தை விரிவு படுத்த வேண்டுமென்ற முறையீட்டின் மீது முடிவு எடுக்கப்பட்டவுடன் இவ்வேலை மீண்டும் தொடங்கப்படும்.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற முடிவை விரைவிலேயே எடுத்து இந்தத் திட்டத்தை விரைவிலே முடிக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வியை எழுப்பியுள்ள மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள்தான் இந்தத் திட்டம் விரைவுபடுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையை அனுப்பியுள்ளார்கள். அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் இப்பொழுது ஆய்விலே இருக்கிறது. இதற்கு ஏறத்தாழ 12 லட்சம் ரூபாய் ஆகுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆய்விற்குப் பிறகு அதற்கான வேலைகள் விரைவிலே தொடங்கப்பெறும்.

**DR. H. V. HANDE :** While answering a previous question, the Hon. Minister has stated that the extra production would be about 902 tonnes. Has this Government examined the amount that is going to be spent and also compared it with the tonnage of extra production and whether it is proportionate or disproportionate to the amount spent?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முடிந்த கேள்வியாக இருந்தாலும் பதில் சொல்கிறேன். அதற்காக 11 திட்டங்களுக்கு செலவழிக்கப்பட்ட எஸ்டிமேட் தொகை 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அதன் மூலமாக பயனடைகிற ஆயக்கட்டு 1,726 ஏக்கர். அதிலே பழைய பகுதிகள் 1,114 ஏக்கர், புதிதாக பயன் அடைகின்றவை 612 ஏக்கர். கூடுதலாக உணவு உற்பத்தி 902 டன் ஆகிற காரணத்தால் இந்தத் திட்டத்திற்கு ஆகிற செலவு விரயமாகிற செலவு அல்ல.

### தனியார் துறை பஸ்கள்

*29 வின—**திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தனியார் துறையில் ஓடும் பஸ்கள் எத்தனை ?

(இ) தமிழ் நாட்டில் இந்த பஸ்களை நடத்தும் உரிமையாளர்கள் எண்ணிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) இம் மாநிலத்தில் தனியார் துறையில் இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை 1—1—1968 அன்றிலிருந்தவாறு :—

வழித்தடப்பேருந்துகள்—4,543.

இருப்பிலுள்ள பேருந்துகள்—1,114.